# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/23 - 2018 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2018.12.18

*2102/23 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர் இல.: RPDS/LND/09/ACQ/15/(CEB).
காணி எடுத்தல் தொடர் இல.: 4-3/2/2016/CEB/401.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவின் உடபத்துவ சிறு பகுதியின், 1604 கல்லேல்ல கிராம அலுவலர் பிரிவின் நுகேபொல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபடம் 406 என்ற வரைபடத்தின் 377 இன் படி விபரிக்கப்படும் காணித் துண்டு :

1. **துண்டு இல. 377**

காணியின் பெயர்: கலபொடவத்த; விபரம்: வெளிப்படையான வெற்று நிலம்; உரிமை கோருபவர்: அபுகஸ்தன்ன பெருந்தோட்ட நிறுவனம், இல. 95/A, நம்பபான, இன்கிரிய; விஸ்தீரணம்: 1.4489 ஹெக்டயார்.

மேற் குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஆர். எம். பிரதீபிகா டீ. இலுக்கும்புர,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி,
2018, திசெம்பர் 12.

01 - 40


1A - G 29114 - 17 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.